**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 221/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.6 |
| Name : | திரு. ஜெய்க்குமார் (சிறப்பு உதவி ஆய்வாளர்) |
| Father's/Husband Name: | திரு. சின்னையன் |
| Village : | பாடாலூர் காவல் நிலையம் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 49/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 20.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 1 முதல் 10 வரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

i) நான் தற்போது பாடாலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.11.2021ம் தேதி அன்று பாடாலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக சிக்கந்தர்பாஷா என்பவரும் காவல் ஆய்வாளராக ஜெயராமன் என்பவரும் பணியிலிருலுந்தார்கள். தற்போது பணிமாறுதல் பெற்று வேறு மாவட்ட காவல்நிலையத்தில் பணி செய்து வருகிறார்கள் என்பதாலும் மேற்படி நபர்களை அழைத்து விசாரணை செய்வதால் மேலும் காலதாமதம் ஏற்படும் என்பதாலும் வழக்கின் தன்மையை கருதி வழக்கை விரைந்து முடிக்க வேண்டி மேற்படி நபர்களுக்காக கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் எதிரிகளுக்கெதிராக எந்த ஒரு புதிய சங்கதிகளையும் நீதிமன்றத்தில் பதிவு செய்யவில்லை. கடந்த 06.11.2021ம் தேதியன்று உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்த போது பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு

சென்று உள்நோயாளியாக இருந்த சாட்சி கருப்புசாமி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் அதனை பரிசீலனை செய்து பாடாலூர் காவல் நிலைய குற்ற எண் 584/2021 பிரிவுகள் 147,148,294(b),427,447,506(2) r/w 4 of TNPHW Actன்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ5 ஆகவும், உதவி ஆய்வாளர் நிலையத்தில் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை பெற்ற காவல் ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் செந்தில், பிச்சை ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ7 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சம்பவத்தில் பயன்படுத்திய மூன்று கருவேல கட்டைகளையும், உடைந்த ஓட்டின் துண்டுகள் நான்கினையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அது படிவம் 91 மூலமாக (RP.No. 5/2022)ன் மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த **படிவம் 91 அ.சா.ஆ10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள **வழக்கு சொத்துக்கள் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் கருப்புசாமி, துரை, மகேஷ்வரி, பிச்சை, செந்தில் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் 1 முதல் 6 வரையிலான நபர்களை கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்கள். மற்ற எதிரிகள் பெரம்பலூர் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை. அ.சா.1க்கு மருத்துவமனையில் சிகிச்சையளித்த மருத்துவர் சவிதா என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று ஒன்று பெறப்பட்டுள்ளது. அந்த **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்படுகிறது. அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரிகளின் செய்கையானது பிரிவுகள் 147,148,294(b),323,324,427,447,506(2) r/w 4 of TNPHW Actன் படி கடந்த 15.06.2022ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அது போன்று நீதிமன்றத்தில் சாட்சி அளித்துள்ள மற்ற சாட்சிகளும் அ.சா.2 துரை, அ.சா.3 மகேஷ்வரியும் நீதிமன்ற சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 கொடுத்த புகாரை சரிவர விசாரணை செய்யாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் எதிரிகளுக்கெதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.